1975 மார்ச் 7]

திரு. எம். சுரேந்திரன் : தரங்கம்பாடி கோயிலில் கடலரிப்பு ஏற்பட்டு விட்ட காரணத்தால் அதை வேறு இடத்திற்கு மாற்றுவதாகச் சொன்னார்கள். அப்படி மாற்றுவதற்கு தெய்வ அனுமதி பெறப்பட்டிருக்கிறதா? அல்லது மனித அனுமதியின் பேரில் செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தெய்வ நம்பிக்கையுள்ளவர்களிடத்தில் அனுமதி பெற்ற பிறகுதான் செய்யப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்).

2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழில் தி.மு.க. உறுப்பினர் ஒருவரை அ.தி.மு.க. உறுப்பினர் என குறிப்பிடப்பட்டுள்ளது குறித்து.

திரு. நா. வீராசாமி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் 5-வது பக்கத்தில் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

"MLA wants to carry a stick"

"In the Assembly on Thursday, Mr. Durai Murugan (ADMK) asked the Speaker for permission to arm himself with a stick before coming to the Assembly" என்று போட்டிருக்கிறது. திரு. துரைமுருகன் அவர்கள் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர் இப்படிப்பட்ட தவறான காரியங்களைச் செய்ய மாட்டார். சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் ஒரு கட்சியிலிருந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். பத்திரிகைகளாகப் பார்த்து சிலரை இப்படி அனுப்பிக் கொண்டிருந்தால் அது கட்சிகளுக்கு ஆபத்து. சபாநாயகர் அவர்கள், பத்திரிகைகள் செய்திகளைப் போடும்போது முறையாகப் போட ஏற்பாடு செய்ய வேண்டும். திரு. துரைமுருகன் அவர்கள் தப்பித் தவறி தொகுதிக்குப் போனால் கழகத் தோழர்கள் கண்டனம் தெரிவிக்கக்கூடும். சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றித் தவறாக இப்படிச் செய்திகள்

வராமல் தாங்கள் தடுக்க வேண்டும். இதுபற்றித் தாங்கள் தீர்ப்புக் கூறவேண்டும்.

(முற்பகல் 10.00)

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, காலையிலே அந்த பத்திரிகையைச் சேர்ந்த திரு. ஸ்ரீனிவாசன் என்று நினைக்கிறேன், அவரே போன் செய்து, பத்திரிகையில் இப்படி உங்களைப் பற்றித் தவருகச் செய்தி போட்டு விட்டோம், இது கம்போசிங்கில் வருகிற தகராறு, எங்களை அறியாமல் ஏற்பட்டு விடுகிறது, இதற்காக மன்னிப்பு கேட்டுக் கொள்வதோடு நாங்கள் இதற்கு திருத்தமும் போட்டு விடுகிறோம். இப்படி சில நேரங்களில் தவறுகள் தவிர்க்க முடியாமல் வந்து விடுகிறது என்று என்னிடத்தில் சொன்னார்கள். நான் அவரிடத்தில் சொன்னேன், சில நேரங்களில் உங்கள் பத்திரிகையில் என்ன, எல்லா பத்திரிகைகளிலுமே, உங்களுக்கு பெரிய ஆட்களைப் பற்றித் தான் ஞாபகம் வரும். சொன்னது வேறு யாரோ என்று இருந்தாலும் உங்கள் ஞாபகத்திற்கு என் பெயர் தான் வந்திருக்கிறது. அதனால் பரவாயில்லை. நாளைக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து மறுப்பு அளிக்கவேண்டுமென்று நான் சொல்லியிருக்கிறேன்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பி திரு. துரைமுருகன் நல்லவர், அவரெல்லாம் இந்த மாதிரி கட்சிகளிலெல்லாம் போய்ச் சேர்ந்ததாக வரக் கூடாது என்று சொன்னார்கள். அது அவருடைய பாயிண்ட் ஆஃப் ஆர்டர். அது உண்மை தான். ஏனென்றால் இந்தச் செய்தி வெளியே தெரியவேண்டும். திரு. துரை முருகனே எங்கள் கட்சிக்கு வந்தாலும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, * * * எ.டி.எம்.கே. பக்கம் திரும்பிப் பார்க்காது.

---

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

1975 மார்ச் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மாதிரி பேச்சுகளுக்கு நான் இடம் கொடுக்கிறது இல்லை.

திரு. கோவை செழியன்: இது மாதிரி எனக்குச் சொல்லத் தெரியாதா ?

(பல அங்கத்தினர்கள் எழுந்திருந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அங்கத்தினர்கள் உட்கார வேண்டும். நான் திரு. வீராசாமி அவர்கள் எழுப்பிய பாயிண்ட் ஆஃப் ஆர்டருக்கு பதில் சொல்ல வேண்டும்.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, நம்முடைய திரு. துரை முருகன் அவர்கள் சொல்கிற நேரத்திலே நான் ஏ.டி.எம்.கே. விற்குப் போக மாட்டேன் என்று சொல்வதில் பொருள் இருக்கிறது. ஆனால் அதையொட்டி அவர் பேசியதை அவர் வாபஸ் பெற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சொல்லிய வார்த்தை நிகழ்ச்சிக் குறிப்புகளில் ஏறாது.

திரு. முனு ஆதி: தலைவரவர்களே, அவர் சொன்னதை திரும்பி பெறவேண்டும். அப்படி நானும் ஏதோ சொல்லி விட்டுப் போகிறேன். இதை அனுமதித்தால் நான் பேசும்போது கெட்ட வார்த்தையெல்லாம் பேசுவேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு உறுப்பினர் சபையில் அவ்வாறு பேசுகிறார் என்றால் அதை வாபஸ் வாங்க வைக்க முடியாது. ஆனால் நிகழ்ச்சிக் குறிப்புகளில் ஏறாது. இப்படிப்பட்ட வார்த்தைகளை பயன்படுத்தாது இருக்க வேண்டுமென்று நான் அங்கத்தினர்கள் எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன். நான் திரு. வீராசாமி எழுப்பிய பாயிண்ட் ஆஃப் ஆர்டருக்கு பதில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. முனு ஆதி: தலைவரவர்களே, அவர் சொன்ன வார்த்தையை திரும்பப் பெறுகிறாரா இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவைக் குறிப்புகளில் ஏறாது. உறுப்பினர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறை இருக்கிறது அதன்படி உறுப்பினர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

திரு. முனு ஆதி: தலைவரவர்களே, அவர் சொன்னதை வாபஸ் பெறுகிறாரா இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சபாநாயகருக்கு ஆணை இடக்கூடாது.

திரு. முனு ஆதி: நீங்கள் ஒரு பக்கமாக ஆணை இடுவது தான் தெரியுமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வீராசாமி ஒரு பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பினார்கள். இன்று காலையில் நானே அந்த பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தேன். அந்த பத்திரிகையைப் படித்துக் கொண்டிருக்கும் நேரத்திலே அந்த பத்திரிகை நிறுவனத்திலிருந்து எனக்கு போன் வந்தது. மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் கூறியது போலவே அந்த பத்திரிகை நிருபர் அவர்கள், இப்படிப்பட்ட தவறு நடைபெற்றிருக்கிறது, நான் துரைமுருகன் அவர்களுக்குச் சொல்லலாம் என்று பார்த்தேன், அவர் இன்னும் உறங்கிக் கொண்டிருக்கிறார். என்றாலும் அவருக்கும் சொல்லிவிடுகிறேன். இப்படிப்பட்ட தவறு எப்படியோ நடந்து விட்டது, திருத்தம் போட்டு விடுகிறோம், அவையில் இதைப்பற்றி கருத்துக்கள் வருமானால் எங்களைக் காப்பாற்றவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இப்படி இந்த நிகழ்ச்சியைப் பொறுத்து அவர்கள் பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொண்டிருக்கிறார்கள், அந்த பொறுப்புணர்ச்சியை பாராட்டவேண்டும். ஆக, விழிப்புணர்ச்சியோடு இருக்குமாறு பத்திரிகையாளர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

(ஆ) அரசியல் சட்டத்தைப்பற்றி பேசுவது குறித்த பேரவைத் துணைத் தலைவரின் தீர்ப்பைத் திருத்துவது குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, நேற்று அரசியல் சட்டத்தைப்பற்றி விவாதம் நடக்கிற போது அப்போது தலைமை வகித்த உதவி சபாநாயகர் அவர்கள் ஒரு தீர்ப்பு கொடுத்தார்கள். அந்தத் தீர்ப்பைப் பற்றி தாங்கள் புனராலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்வதற்குக் காரணம், அவர் தீர்ப்பைப் பார்த்தால் அது ஒரு பிளாங்கட் லிபர்ட்டி மாதிரி என்று அரசியல் சட்டத்தில் இருக்கக் கூடிய ஒரு பிரிவை எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய விதி முறைகளிலே கிட்டத்தட்ட 10, 12 இடங்களிலே